**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 176/2019**

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25–ம் நாள் திட்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 25.082025 | தகப்பனார் பெயர்: | திரிசங்கு |
| பெயர்: | சரவணன்<br>(PW– 2 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | சந்தப்படுகை | சமயம்: | |
| தொழில்: | | வயது : | 52/2025 |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 25.08.2025**

**(ஆரம்பித்த நேரம்– 14.33)**

1. வாதி பரமசிவம் சீர்காழிக்கு தெற்கே உள்ள பெருந்தோட்டத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். பெருந்தோட்டத்திற்கும் திருமைலாடிக்கும் இடைப்பட்ட தூரம் சுமார் 25 கி.மீ இருக்கும் என்றால் சரிதான். தாவா வழக்கு சொத்தின் சர்வே எண்– 232/10. மேற்படி சர்வே எண் 232/10ன் மொத்த பரப்பு எவ்வளவு என்று எனக்கு தெரியாது. மேற்கண்ட புல எண்ணில் எனக்கு 100 குழி நிலம் உள்ளது, நந்தகுமாருக்கு 200 குழி உள்ளது. நான் வாங்கியது கிரயப்பத்திரம் மூலமாக. அந்த சொத்து யாரிடமிருந்து வாங்கப்பட்டது என்றால் நரசிம்மராவ் என்பவரிடமிருந்து வாங்கப்பட்டது. மேற்படி நரசிம்மராவின் பங்காளி தான் ராகவேந்திரராவ் என்றால் சரிதான். என்னுடைய நிலத்தை நரசிம்மராவ் எழுதிக்கொடுத்தாரா அல்லது ராகவேந்திரராவ் எழுதிக்கொடுத்தாரா என்றால் அதுபற்றி எனது தாயாருக்குதான் தெரியும்.

2. வழக்கு சொத்தை தவிர வாதி பரமசிவத்திற்கு வேறு எந்த சொத்தும் திருமைலாடி கிராமத்தில் இல்லை என்றால் சரிதான். பரமசிவத்திற்கு தான் தாவா

சொத்து சொந்தமானது என்பதற்கான ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை, கேள்விபட்டிருக்கிறேன். பரமசிவம் திருமைலாடி கிராமத்தில் தனது சகோதரியை பழனிவேல் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளார். தாவா சொத்து சகோதரி மற்றும் மைத்துனருக்காக வாங்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பரமசிவம் அனுபவத்தில் உள்ளது என்பதற்காக என்ன சாகுபடி செய்து வருகிறார் என்பதை நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் அதில் சோளம் பயிரிட்டுள்ளதாக கூறியுள்ளேன். பரமசிவம் தாவா சொத்தை சாகுபடி செய்யவில்லை, செல்வத்திடம் தான் தாவா சொத்து உள்ளது என்றால் சரியல்ல.

3. பரமசிவம் தீபாவளி, பொங்கல் பண்டிகையை தவிர மற்ற நாட்களில் திருமைலாடி கிராமத்திற்கு வரமாட்டார் என்றால் அவர் பயிர் செய்துள்ளதால் வாரத்திற்கு ஒருமுறை வந்து செல்வார். அந்த நிலத்தை சாகுபடி செய்து நான் தான் பராமரித்து வருகிறேன் என்றால் சரிதான். (சாட்சி தற்போது அவ்வப்போது பணம் கொடுப்பார் என்று தன்னிச்சையாக கூறுகிறார்) இன்றைக்கும் சாட்சியம் அளிக்க பணம் கொடுத்ததால் தான் நான் வந்திருக்கிறேன் என்றால் இல்லை. பரமசிவம் தவிர மற்றவர்களின் வயலுக்கு நான் விவசாய வேலைக்கு செல்வேனா என்றால் செல்வேன். வழக்கு சொத்தில் பரமசிவம் எந்த பயிரும் சாகுபடி செய்யவில்லை, அதனால் தான் நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரியல்ல. நான் பரமசிவத்திற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.</u>**

**<u>மறு விசாரணை இல்லை.</u>**

**(முடிவு நேரம்– 14.51)**